பில்லமங்கலம்

அருள்திரு அருணாசல சுவாமிகள்

பதினாறாம் ஆண்டுக்

குருபூசை விழா மலர்

21—6—1960

ார்வரி ஆண்டு ஆனித் திங்கள் 8-ஆம் நாள்

அருள்திரு அருணாசல சுவாமிகள்

வரலாறு

கா. அரு. கா. காடப்ப செட்டியார்
திருமகள் இல்லம், வக்கங்குடி

உ
சிவமயம்
அண்ணுமலையார் துணை

அருள்திரு :

அருணுசல சுவாமிகள் வரலாறு

காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு சோழ அரசர்கள் அரசு செலுத்திய காலத்தில் முடிசூட்டும் பேறுபெற்றவர்களாக இருந்த சமூகம், மகுட தனவைசியர் எனச் சொல்லப்பெறும் நாட்டுக்கோட்டைச் செட்டியார் சமூகம் ஆகும். காலமாறுபாட்டில், பாண்டிநாட்டில் குடியேறிய இச்சமூகத்தினர், 96 ஊர்களில் வசித்தனர். கண்ணியமான வாழ்க்கைக்குத் தேவையான, சிறந்த கோட்பாடுகளைக் கைக்கொண்டு ஒழுக்கத்தில் உயர்ந்து விளங்கிய இவ்வினத்தாரிடம் ஈடுபட்ட பாண்டிய மன்னன், ஒன்பது சிவன்

கோயில்களை இவர்களிடம் தந்து, சீரிய முறையிற் பரிபாலிக்க வேண்டினன். ஒரே பழக்க வழக்கத்தை உடையதாய் இருக்கும் இச் சமூகம், ஒன்பது கோயில்களைப் பரிபாலிக்கும் காரணத்தால் ஒன்பது பிரிவாகப் பிரிந்து கொண்டிருக்கவேண்டும். இவ்வொன்பது கோயில்களில் ஒன்று மாற்றூர். போகர் என்ற மாமுனிவரால், அவ்வூரில் தங்கத்தில் 500 மாற்றுக் காணப்பெற்றமை காரணமாக அங்குள்ள ஈசர் ஐந்நூற்றீசுவரரெனவும், அவ்வூர் மாற்றூரெனவும் வழங்கப்பெறுகின்றன. இக்கோயில் பிரிவின் உட்பிரிவுகள் ஏழு.

மாற்றூர்க் கோயிலின் உட்பிரிவுகள் ஏழில் ஒன்முன மணலூர்ப் பிரிவைச் சேர்ந்த பிச்சப்ப செட்டியார் மகன் குப்பான் செட்டியார், தன் மனைவி மெய்யம்மையுடன் சிறுவயலிற் சில காலமும், ஆதனூரிற் சில காலமும் வாழ்ந்திருந்து, பிறகு வாரியப்பட்டியில் நிரந்தரமாக இருந்திருக்கிருர். அன்னுருக்கு ஆண்மக்கள் ஐவர். அவர்களில் இளையவர் இராமன் செட்டியார் என்பவர். அவர் மனைவி உமையவள். இவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள்

மூவரில் நடுவிலவர் காடப்ப செட்டியார் ஆவர். அவர் காலத்தில் பலசரக்கு வியாபாரமும் புடைவை வியாபாரமும் முக்கியமானதாக விளங்கின. காடப்ப செட்டியார் இளமையில் அறுப்புக்கோட்டையில் புடைவை வியாபாரம் செய்தார். ஒருமுறை வண்டியிற் புடைவைகளை ஏற்றிக்கொண்டு ஊருக்கு வந்தபோது, வழியில் ஓர் இரவைக் கழிப்பதற்காக மேலூரில் அவர் தங்க நேர்ந்தது. வண்டியிலேயே புடைவைக் கட்டுகளின் மேல் துயில் கொண்டிருந்த நிலையில் திடீரென்று "ஒருவன்" குதிரையில் வந்திறங்கி, அவர் மார்பிலடித்து, "தூக்கமா? விழித்துக்கொள், திருடன்!", என்று சொல்லியது போலிருக்கவே, விழித்தெழுந்து குதித்தார். உண்மையாகவே வண்டியினடியிலிருந்து இரண்டு கள்வர்கள் ஓடக் கண்டார். புடைவைக் கட்டு அறுக்கப்பெற்றிருந்தது. ஆனால், நல்லவேளையாக ஒரு துணி கூடக் களவு போகவில்லை! அக்குதிரை வீரன், அவர் குலதெய்வமாக வழிபடும், ஆலத்துப்பட்டிக் காடய்யனார் கோயிலிலுள்ள பெரியகறுப்பனே ஆகும்! அந்நிகழ்ச்சியிலிருந்து ஆலத்துப்பட்டிக் கோயிலில் காடப்ப செட்டியாருக்கு அளவு கடந்த

நம்பிக்கை உண்டாயிற்று. அவர், பிற்காலத்தில் பினங்கு சென்று வட்டித் தொழில் நடத்திப் பொருள் ஈட்டித் திரும்பினர்.

போக்குவரத்துக்கு வாய்ப்பும் தகுந்த சாதன வசதியும் குறைவாக இருந்த காலத்திலேயே கடல் கடந்து வாணிகம் செய்யத் துணிந்த செட்டியார் இனம், அவர் தம் ஒழுக்க உயர்வாலும், நாணய முறையாலும், சேமிப்பு எண்ண நிறைவாலும், குறுகிய காலத்திலேயே பெரும் பொருள் ஈட்டியது.

காடப்ப செட்டியாரும் அவர் மனைவி வினைதீர்த்தாளும் செய்த பெருந்தவத்தால் இராட்சச ஆண்டு ஆடித்திங்கள் 30-ஆம் நாள் திங்கட்கிழமை (1855-ஆம் ஆண்டு) மக மீன் பொருந்திய நன்னாளில், இன்று தெய்வமாக நின்று குருபூசை பெறும், அருணாசலம் செட்டியார் பிறந்தார்கள். இவர் ஓராண்டுக் குழந்தையாக இருக்கும் போதுதான் இவர் பாட்டனார் இராமன் செட்டியார் குடும்பத்துடன் ஆத்தன்குடிக்கு வந்தார். இங்கு வந்த மறு ஆண்டில் காடப்ப செட்டியாரால் ஊருணிக்

கரையில் அவர் கையால் நடப்பெற்ற அரசு ஓங்கி வளர்ந்து பொலிவாக நிற்பதை இன்றும் காணலாம்.

பழையாத்தன்குடி என்று, இன்று சொல்லப்பெறும் ஊர், முன் ஆத்தன்குடி என்று வழங்கி வந்தது. அவ்வூரில் பல செட்டியார்கள் குடும்பம் இருந்தன. அவர்களில் சேக்கன் செட்டியார் மகன் காடன் செட்டியார் என்பவர் சின்ன மருதுவின் உதவியால் குன்றக்குடி அன்னதான சத்திரத்துக்கு ஐந்து ஊர்களை இனுமாகப் பெற்றூர். அதில் ஒன்று அரண்மனைப்பட்டி என்பதாகும். தனக்கு உரிமையாகக் கிடைத்த அரண்மனைப்பட்டிக்கு, ஏறக்குறைய நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன், காடன் செட்டியார் குடும்பம் ஆத்தன்குடியிலிருந்து குடி வந்தது. ஆத்தன்குடியிலிருந்த மற்றைய குடும்பங்கள் அப்போது அரண்மனைப்பட்டியிற் குடியேற உடன்படவில்லை. ஆகையால் வேறு பல சிற்றூர்களிலிருந்து பல குடும்பங்களை, காடன் செட்டியார் விரும்பி அழைத்து அரண்மனைப்பட்டியில் குடியேற்றி ஊர் ஆக்கினூர். அவ்வாறு விரும்பி அழைக்கப்பெற்ற காலத்தில் வாரியப்பட்டி

யிலிருந்து பி. கு. இராமன் செட்டியாரும் அவருடன் பிறந்தோராகிய சுப்பிரமணியன் செட்டியாரும், அருணுசலம் செட்டியாரும், பெரிச்சியப்ப செட்டியாரும் ஆக நான்கு குடும்பத்தார் அரண்மனைப்பட்டிக்குக் குடிவந்து நான்கு தனித்தனி வீடுகள் கட்டிக் கொண்டனர். இச் சகோதரர்களில் மூத்தவரான பிச்சப்ப செட்டியாரின் வாரிசுகள் பல ஆண்டுகளுக்குப் பின் இங்கு வந்தனர். பழையாத்தன்குடி என்று இன்று சொல்லப்பெறும் ஆத்தன்குடியிலிருந்த குடும்பமனைத்தும் சில காலத்தில் அரண்மனைப்பட்டியில் வந்து குடியேறி, அரண்மனைப்பட்டியை ஆத்தன்குடி ஆக்கிவிட்டனர். முதலில் ஆத்தன்குடி என்றிருந்த ஊர் பழையாத்தன்குடி ஆகிவிட்டது! இன்று ஆத்தன்குடி எனப்பெறும் ஊரின் பஞ்சாயத்தை அரண்மனைப்பட்டிப் பஞ்சாயத்து என்றே இன்றும் குறிப்பதைக் காணலாம்!

அக்காலத்தில் செட்டியார்கள் குடும்பம் ஊரைவிட்டு ஊர் மாறுவது இயல்பு. ஆகையால் அந்தப் பழைய 96 சிற்றூர்களிற் சில இப்போது செட்டியார் குடும்பங்கள வசிக்

காத சிற்றூர்களாகி விட்டன. இன்று செட்டியார்கள் வசிக்கும் ஊர் 78.

அருணுசலம் செட்டியார் அவர்களுக்கு மூன்று மனைவிகள். முதல் மனைவி வள்ளியம்மை. அருணுசலம் செட்டியார் ஒரு முறை இரங்கோனிலிருந்து கப்பலில் திரும்பும் போது நாலாவது நாள் சென்னைக் கரை சேர வேண்டிய கப்பல் காற்ருல் அலைக்கழிக்கப்பட்டு ஆருவது நாள் வரை கடலில் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தது. ஆருவது நாள் இரவு மனவருத்தத்துடன் துயில் கொண்டிருந்த பொழுது அவர்களின் முதல் மனைவி வள்ளியம்மையின் திருவுருவத்தை கனவில் கண்டு மனத் தெளிவுபெற்று காலையில் விழித்ததும் விசாகைத் துறையைக் கண்டனர்! அன்று முதல் வள்ளியம்மையை அன்போடு நினைத்து, வீட்டில் படைத்துத் தெய்வமாக வைத்து வழிபாடு நடந்து வருகிறது. வாழ்க வள்ளியம்மை நாமம்!

இரண்டாவது மனைவி நாச்சம்மை ஆச்சிக்கு வள்ளியப்ப செட்டியார், முத்து வள்ளியப்ப செட்டியார், வள்ளியம்மை ஆச்சி

ஆக மூன்று மக்கள். மூன்ருவது மனைவி மீனாட்சி ஆச்சிக்கு அண்ணாமலை செட்டியார், பழநியப்ப செட்டியார், காடப்ப செட்டியார், அன்னபூரணி ஆச்சி, வள்ளியம்மை ஆச்சி ஆக ஐந்து மக்கள்.

அருணாசலம் செட்டியார் இளமையிலேயே பர்மாவுக்குச் சென்று தொழில் தொடங்கினார்கள். பெருமனம் படைத்த கோனாபட்டு முத்துக்கறுப்பன் செட்டியாருடன் கூட்டாக வட்டித்தொழில் செய்தார்கள். ஈட்டிய பொருளில் ஈகையும் உண்டு.

பி. கு. பி. சுப்பிரமணியன் செட்டியார் என்பவர் பில்லமங்கலத்தில் தண்ணீர்ப்பந்தல் தருமத்துக்குக் கட்டிடம் கட்டினார். அக்கட்டிடத்தில் துவாதசி தோறும் சில அந்தணர்களுக்கு உணவளித்தார். பிறகு ஒவ்வொரு நாளும் உணவளிக்க ஏற்பாடு செய்தார். தான் தனியே செய்யாது பி. கு. வகைப் பங்காளிகளிடம் ஏறக்குறைய எழுபது ஆண்டுகளுக்கு முன் அத்தருமத்தைச் சேர்ப்பித்தார். அதன் பின் ராம. கா. அருணாசலம் செட்டியாரவர்களின் ஊக்கத்தால் இப்போதிருக்கும் சத்திரம்

கட்டப் பெற்றது. நேரடியாகச் சம்பந்தப்பட்டு அத்தருமத்தைச் சிறப்பாக நடத்தி வந்தும் என்றென்றும் நடந்துவருவதற்கான முயற்சியும் உதவியும் செய்தார்கள். இப்பகுதிகளில் நடைபெறும் சத்திரங்களில் சிறந்ததென மதிக்கத்தகுந்ததாக அத்தருமம் இன்றும் நடைபெறுகிறது ! ,

ஆத்தன் குடியில் ஏறக்குறைய தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் ஒரு சிவலிங்கம் ஊருணிக்கரையில் சாதாரணமாக ஒரு கொட்டகையில் ஸ்தாபிக்கப்பெற்றது. சில ஆண்டுகளுக்குப் பின் பரிவார தேவதைகள் உள்பட ஸ்தாபிதம் செய்து சிவன்கோயில் ஒன்று கட்டப்பெற்றது அதன்பின் இப்போதிருக்கும் பெரிய கல்திருப்பணி நகரத்தார்களால் தொடங்கப்பெற்றுப் பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகள் வேலை நடந்து பத்து இலட்சம் ரூபாய் வரை செலவு செய்து 1928-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கும்பாபிடேகம் சிறப்பாகச் செய்யப்பெற்றது. இக்கோயிலும் குளமும் அழகுடன் அமையப்பெற்றிருக்கின்றன. சித்திர வேலையும் சிற்ப வேலையும் மிக உயர்ந்தன. ராம. கா.

அருணுசலம் செட்டியாரவர்கள் இச் சிவன் கோயிலை உருவாக்கும் செயலில் முதன்மை யாக நின்று மிக ஆர்வத்துடன் ஒத்துழைத் தார்கள். அவர்கள் முயற்சியையும் மேற் கொண்ட பெரும்பங்கினையும் ஈண்டு நாம் நினைவு கூருதல் வேண்டும்.

அருணுசலம் செட்டியாரவர்களின் அறு பதாம் ஆண்டு நிறைவுவிழா நாச்சம்மைஆச்சி மீனுட்சிஆச்சி இருவருடனும் 1915-ஆம் ஆண்டில் கொண்டாடப்பெற்றது. அந்த விழாவின்போது ஆத்தன்குடியில் வீட்டுக்கு முன் வீதியில் நிரந்தரமான கொட்டகை ஒன்று தகரத்தால் போடப்பெற்றது. அத் தகரக்கொட்டகை இன்றும் அரிய தண்ணிழல் தந்து பெரும் பயன் செய்து வருகின்றமை யைக் கண்கூடாகக் காணலாம்.

ஏறக்குறைய 1300 ஆண்டுகளுக்கு முன் பல்லவஅரசர்களில் ஒருவரான இராசசிம்மவர்ம பல்லவனுல் காஞ்சீபுரத்தில் கைலாசநாதர் கோயில் அருமையான சித்திர வேலைப்பாடு களுடன் கற்றிருப்பணியாகக் கட்டப்பெற்றது. அவனுடைய காலத்திற்கு முன்னர் கோயில் கள் மரத்தாலும் செங்கல்லாலுமே கட்டப்

பெற்றன. இவனுடைய காலத்தில்தான் கற்களால் கோயில்கள் கட்டப்பெற்று நிலையான கட்டமைப்பைப் பெற்றன. பிறகு அவனைப் போன்றே சேர, சோழ, பாண்டிய, பல்லவ அரசர்களால் பல பெரிய கோயில்கள் தமிழ் நாடெங்கும் அமைக்கப்பெற்றன. அக்கோயில்களே இன்று தமிழர்களின் பெரும் செல்வம் ஆகும். அவ்வாறு செல்வம் என்று மதிக்கப் பெறுகிற கோயில்களில் பல, கால நீடிப்பால் பழுதடைந்தன. அப்படிப் பழுதுற்ற கோயில்களில் ஏறக்குறைய 400, 500 கோயில்களைச் செட்டியார் சமூகத்தினர் புதுப்பித்திருக்கிறார்கள். அவை தமிழ்ப் பண்பாட்டின் நிலையங்களாகவும் தமிழ்க் கலைக் கருவூலங்களாகவும் விளங்குகின்றன.

அந்தப் பழக்கத்தை யொட்டி, அருணாசலம் செட்டியாரவர்கள் பில்லமங்கலத்தில் பாண்டிய மன்னர் காலத்தில் கட்டப்பெற்ற ஸ்ரீ ஆளுடைநாயகி அம்மை உடனாகிய ஆகமேசுவரசுவாமியின் திருக்கோயிலைப் புதுப்பித்து 1928-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் குடமுழுக்கு நிகழ்வித்தார்கள்.

அவ்விதமாகவே, அருணசலம் செட்டியாரவர்கள் தஞ்சை மாவட்டத்தில் தோலி என்னும் இடத்தில் உள்ள சிவன்கோயிலை நா. பழ. வீர. முத்துக்கறுப்பி ஆச்சி, தன் மனைவி மீனட்சி ஆச்சி ஆகியோரின் பொருளைக்கொண்டு, தான் முன்னின்று புதுப்பித்துச் சீர்செய்து 1939-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் மிகச் சிறப்பாகக் கும்பாபிடேகம் செய்வித்தார்கள். தானும் நல்வழிகளில் செலவிட்டுப் பலருடைய செல்வமும் சீரிய வழிகளில் பயன்பெற உதவி புரிந்தார்கள்.

அறச்செயல்களே புரியும் செட்டியார்கள் தாங்கள் வாழும் இடமான 78 ஊர்களில் கோயில்கள் கட்டியிருக்கிருர்கள். அன்னசத்திரம், பசுமடம், நந்தவனம், வேதபாடசாலை, தேவாரப்பாடசாலை பலவும் ஏற்படுத்தியிருக்கிருர்கள். தங்கள் ஊர்களில் மட்டுமல்ல! தமிழ் நாட்டில் மட்டுமல்ல ! இப்பரதகண்ட முழுவதுமே அவ்வாறு செய்துள்ளார்கள் !

ஆத்மீக வளர்ச்சிக்கு உதவியாகும் இத் தருமங்களுடன் லௌகீக தர்மங்களும் செய்து

உதவுவது இச்சமூகம், என்ற வாசகத்தினை தன் மனைவி மீனாட்சி ஆச்சியின் பொருளைக் கொண்டு "மீனாட்சி மருத்துவ நிலையம்" என்ற இலவச மருத்துவசாலையைத் திறந்து வைத்ததன் மூலம் அருணாசலம் செட்டியார் அவர்கள் மேலும் பொலிவுபெறச் செய்தார்கள்.

விவேக விளக்க வித்தியாசாலை என்ற பள்ளியைச் சிறந்த ஆசிரியரான விராலூர் சுப்பராமய்யரைக் கொண்டு ஆத்தன்குடியில் சொந்தக் கட்டிடத்தில் நடத்தினார்கள். அதன் சார்பில் வாணி விலாச வாசகசாலையும் சரஸ்வதி விலாச சாஸ்திரசாலை என்ற நூல்நிலையமும் இருந்தன. இவைகளின் சார்பில் ஆண்டு விழாக்கள் மிகச் சிறந்த அறிஞர்கள் பங்குபெற்று நடைபெற்றன. கல்வியில் அவர்களுக்கு இருந்த ஆர்வம் இவற்றால் தெரிகிறது.

பல வழிகளாலும் சீரும் சிறப்பும் பெற்ற அருணாசலம் செட்டியார் அவர்கள் கையால் திருப்பூட்டப்பெற்று இல்லறம் தொடங்கிய குடும்பங்கள் பலப்பல. ஆத்தன்குடி சிவன்

கோயிலில் தினசரி துறவியர்க்கும், மற்றவர்க்கும் நண்பகல் அல்லது இரவில் உணவு வழங்க ஏற்பாடு செய்துள்ளார்கள். அந்தணர்கள் சிலருக்குத் திருமணம் செய்வித்தும் ஒருவருக்கு வீடு கட்டிக்கொடுத்தும் இருக்கிறார்கள்.

அருணாசலம்செட்டியார் அவர்கள் பணத்தைக் காட்டிலும் பலருடைய கூட்டுறவையே பெரிதென மதித்தார்கள். அவர்கள், தான் மேற்கொண்ட அறச்செயல்களைத் தான் தனியாகவே நின்று முடிக்கக்கூடும் என்றாலும், பிறருடைய ஒத்துழைப்பைப் பெறுவதன் மூலம் தான் மேற்கொண்ட அறத்தைப் பல காலம் நிலைநாட்டமுடியும் என்று நம்பினார்கள். அதனால் பலருடைய முயற்சியை அற வழியில் ஈடுபடுத்த அவர்களால் முடிந்தது.

தருமங்கள் :

1 பில்லமங்கலத்தில் பங்காளிகள் எல்லோருடனும் சேர்ந்து நடைபெறும் பி. கு. சத்திரம்.

2 பில்லமங்கலத்தில் மற்றவர்களுடன் சேர்ந்து ஊருணி தருமம்.

3 பில்லமங்கலத்தில் சிவன் கோயில் தருமம். இதன் சார்பில் அக்கிரகாரம், நந்தவனம்.

4 பில்லமங்கலத்தில் தண்ணீர்ப்பந்தல் தருமம்.

5 ஆத்தன்குடியில் மற்றவர்களுடன் சேர்ந்து அறுபத்து மூவர் குருபூசை மடம்.

6 ஆத்தன்குடியில் சிவன்கோயிலில் மற்றவர்களுடன் சேர்ந்து தீபாவளி, திருப்பள்ளியெழுச்சி உபயங்கள்.

7 ஆத்தன்குடியில் சிவன்கோயிலில் தேசாந்திரிகளுக்குச் சீட்டு வழங்கி உணவு செய்ய மான்யம்.

8 ஆத்தன்குடியில் சிவன்கோயிலில் அபிடேகக் கிணறு.

9 ஆத்தன்குடியில் வீட்டுக்கு முன் தகரக் கொட்டகை அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவின்போது அமைத்தது.

10 ஆத்தன்குடியில் மீனாட்சி மருத்துவ நிலையம்.

11 தோலியில் சிவன்கோயில் திருப்பணி.

12 ஆலத்துப்பட்டியில் ஐயனார்கோயிலில் சிவன்ராத்திரி உபயம்.

13 ஆலத்துப்பட்டியில் ஐயனார்கோயிலில் அபிடேகக் கிணறு.

14 ஆருவது மைலில் தண்ணீர்ப்பந்தல் தருமம்.

15 கடையக்குடியில் கஜேந்திர மோட்சத் திருவிழா உபயம்.

16 அந்தணருக்கு வீடு கட்டிக்கொடுத்தது.

அருணசலம் செட்டியார் மனஉறுதியுள்ளவர்கள். எடுத்த காரியங்களை முடித்துவிடுவார்கள். தொட்டது துலங்கும் பொன்னன கைராசி உடையவர்கள் பிராணிகளிடம் மிகுந்த அன்பு உடையவர்கள். ஏழைகளிடம் இரக்கம் உடையவர்கள். வேலையாட்களைத் தம்மில் ஒருவராக எண்ணுவார்கள். சகோதர வாஞ்சை மிக்கவர்கள். தெய்வசிந்தனை உள்ளவர்கள்.

அவர்கள் வாழ்நாளில் நான்கு வீடுகள் கட்டிக் குடிபுகுந்திருக்கிறார்கள். இரண்டு வங்களா அமைத்திருக்கிறார்கள். இரண்டு கோயில்கள் கட்டிக் குடமுழுக்கு நிகழ்வித்திருக்கிறார்கள். தருமசாலைகளும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

நீண்டநாட்கள் குதிரை வைத்திருந்தார்கள். கலியாண மாப்பிள்ளைகளின் குதிரை ஏற்றங்களுக்கு இக்குதிரைக்கு ஓயாது அழைப்பு இருக்கும்! குதிரை வீட்டுவாசலில் நிற்பது லெட்சுமீகரம் என்பதற்காகக் காலையிலும் மாலையிலும் வீட்டு வாசலிற் குதிரையைக் கொண்டுவந்து நிறுத்தப்பெறும்.

தினம் வீட்டுக்குவரும் ஏழைஎளியவர் களுக்குக் காலணு அரையணு சில்லரையாகக் கொடுத்துக்கொண்டே இருப்பார்கள். இல்லை என்று சொல்வதே இல்லை. இச்சில்லரைத் தருமத்தில் இரண்டணு, நாலணு, ஒருரூபாய் வரைகூடச் சிலருக்குக் கிடைக்கும், அவ் விதம் வருபவர்களில் மனப்பக்குவமில்லாத சிலரால் மிகுந்த தொந்தரவு ஏற்படினும் இப் பழக்கத்தைக் கடைசிவரை வைத்திருந் தார்கள்.

அவர்கள் வேலையாட்களை மனிதர்களா கவே நினைப்பார்கள். வேலையாட்களிடம் ஒவ்வொரு வேலையாக இணக்கமாகச் சொல்லி அதிகவேலை செய்யும்படி செய்துவிடுவார்கள். வேலையாட்களும் நம்பிக்கையும் விசுவாசமும் உடையவர்களாக இருப்பார்கள். சின்னச்சாமி என்ற ஒருவர் வண்டிஓட்டுபவராக இருந்தார். அந்தநாளில் சென்னையிலிருந்து தஞ்சாவூ ருக்கு ரயிலில் வரும்பொழுது ரூபாய் நோட்டுக் கொண்டுவந்தால் சின்னச்சாமி இடுப்பில் தான் அந்நோட்டுக்கள் இருக்குமாம். அவர் கள் ரயிலில் உறக்கம் கொள்ளுவார்களாம். இடையிடையே அவர்கள் விழித்துப்பார்த்து

சின்னச்சாமி உறங்கிவிடவில்லையே என்று சரிபார்ப்பார்களாம். சின்னச்சாமி, "நீங்கள் நன்றாகத் தூங்குங்கள், நான் தூங்கிவிட மாட்டேன்" என்று சொல்லுவாராம். இந் நாளில் இம்மாதிரி நம்பிக்கையும் விசுவாசமும் உள்ள வேலையாட்கள் அமைவது மிக அரிது.

இவர்களிடம் கு. ராம. ப. சிவலிங்கம் செட்டியார் அவர்கள் அன்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். சிவசிந்தனையிற் சிறந்த சிவலிங்கம் செட்டியாரவர்கள் ஒவ்வொரு நாளும் கோவிலுக்குச் செல்லும்பொழுது, "அண்ணன்" என்று கூப்பிடுவதும், இவர்கள், "தம்பி சிவலிங்கமா", என்று கேட்பதும் ஒருவருக்கொருவர் அன்றைய செய்திகளைப் பேசிக்கொள்வதும் உள்ளுறவுகொண்ட இரு மனங்கள் பேசிக்கொள்வதைப் பிரதிபலிக்கும். சிவலிங்கம் செட்டியாரவர்கள், தன் வீட்டில் நடைபெறும் ஒவ்வொரு சிறு காரியத்தையும் இவர்களைக் கொண்டே தொடங்குவார்கள். இப்பழக்கத்தை அவர்கள் கடைசிவரை வைத்திருந்தார்கள்.

உலகியலில் பிரிவு நேர்வது இயற்கை தான் என்பதை எல்லோரும் அறிந்

திருக்கிறோம். இருந்தாலும் பிரிவு நேர்ந்ததும் வருத்தம் ஏற்பட்டு வருந்துகிறோம். இது போல மூன்று சந்தர்ப்பத்தில்மட்டும்தான் இவர்கள் மிகவும் துக்கப்பட்டார்கள். மகன் முத்துவள்ளியப்பன் பிரிவு. வேலையாள் சின்னச்சாமி பிரிவு. வெள்ளைக்குதிரையின் பிரிவு.

துறவு

கோவிலூர் மடாலயத்தில் திருப்பெருந் திரு: மகாதேவ ஞான தேசிக சுவாமி களிடத்தில் ஞானோபதேசம் பெற்றுத் துறவு பூண்டார்கள். அவர்களின் 90 வது வயதில் பில்லமங்கலத்தில் நாலாறு நாட்கள் உடல் நலக் குறைவாக இருந்து தாருண : ஆனி : ருவ (18-6-1944) கார்த்திகைமீன் நிறைந்த பிரதோட நாளில் சிவத்தொடு கலந்தார்கள். அவர்களது உடல் மிகச் சிறப்பாகச் சமாதி செய்யப்பெற்றுள்ளது. அச் சமாதிக் கோயிலில் தாருண : ஆனி : ௰சஉ மோட்ச தீப விழா சிறப்பாகச் செய்யப்பெற்று, தாருண : ஆவணி: ௰உ கும்பாபிடேகம் செய்யப்பெற்றது.


ஆண்டுதோறும் ஆனித் திங்களில் கார்த்திகை மீன் நிறைந்த நாளில் குருபூசை விழா சிறப்புடன் நடைபெற்று வருகிறது. சமாதிக் கோயிலில் தினசரி அபிடேக ஆராதனை நடைபெற்று வருகிறது.

இன்று பதினும் ஆண்டுக் குருபூசை விழா நடைபெறுகிறது. இன்று பிரதோட நாளும் ஆகும்.

இந் நன்னாளில் பில்லமங்கலம் சிவன் கோயிலில் சிவபூசை செய்யும் செல்வர்கள் கூட்டுச் சிவபூசை வழிபாடு செய்கிருர்கள்.

இந்த வரலாற்று மலரை மகிழ்வுடன் இன்று வெளியிடுகிரேம்.

வழிமுறை


பிச்சப்ப செட்டியார்
சுப்பான்செட்டியார்
பி
பெ
அரு
சு
ராம
சு
கா
ப
அரு
ராம
கரு
வள்ளியபப செடடியார்
பழநியப்ப செட்டியார்
காடப்ப செட்டியார்

உ

அருள்திரு அருணாசல சுவாமிகள்

தோத்திரப் பாடல்கள்

தாரண ஆனி மீசு

கொங்குலவும் மலர்ப் பொழில்சூழ்
திருவாத்தன் குடிவாழ்ந்த குபேரசெல்வன்

தங்குமுயர் வணிக குலச்செல்வன்
காடப்பன் நல் தவத்தால் வந்தோன்

எங்கும் உலவிடுபுக ழன்புதயை
இலங்கும்அரு ணாசலப் பேரிசைந்த

பொங்குமொளி எங்குமுறப் பெறு
மோட்சதீப விழா பூர்ணமாமே.

—திருவள்ளுவர் திரிசாரணர் படை

திருவளரும் சீர்ஆத்தன் குடியதனில்
சிறப்பினுடன் திகழ்ந்து நின்று

கருவளரும் பிறப்பொழிக்கக் கோவிலூர்த்
திருமடத்தைக் கருத்தாய் நாடிப்

பெருவளஞ்சால் ஸ்ரீமகாதே வசுவாமி
பெருகருளால் ஞானி யான

பொருவில்பெரும் புகழ்அருணா சலமுனிவன்
தனைத்தினமும் போற்றி வாழ்வாம்.

தன்தனைப்போல் தனம்பெருக்கிப் பெருகறங்கள்
பலசெய்து தலைமை பெற்ற

தனவணிகர் குலம்விளங்க வளர்ஆத்தன்
குடியிலுளோர் தவத்தால் தோன்றி

இனமினமாப் பலவறங்கள் இயற்றியுளத்
துறவெய்தி இலிங்கம் புக்க

கனமிகுமா மணியருணா சலமுனிவன்
திருவடிகள் கருதி வாழ்வாம்.

சீர்வளர் பாண்டி நாட்டில்
திகழுநல் ஆத்தன் குடியில்

ஏர்வளர் வணிக மக்கள்
இனியநற் பேருய்த் தோன்றிப்

பேர்வளர் தொண்டு செய்து
பில்லமங் கலத்திற் சென்று

தார்வளர் பெரியன் அருணா
சலனடி தாழ்ந்து வாழவாம

நல்லவர் புகழுந் தோ[illegible] நகரில்
நம்பிராற் காலயம் அமைத்தும்

பில்லமங் கலத்தில் இறைதிருக் கோயில்
பெட்புடன் புதுக்கியும் எளியோர்க்கு

அல்லல்தீர் உணவு நல்கற நிலையம்
ஆக்கியும் அருந்தவ மேற்கொண்டு

எல்லையில் பெருவாழ் வெய்திய அருணா
சலமுனி வனையிறைஞ் சுதுமே.

சீர்வளருந் திருவாத்தன் குடித்தோன்றிச்
செம்மையறஞ் செறிவுற் றேங்க

நீர்வளரும் பில்லமங் கலந்தோலி
நின்மலனூர் கோவில் செய்வித்(து)

ஆர்வமுடன் கோவிலூ ராதீனத்(து)
அழகியநற் காவியுடையும் பெற்று

பேர்வளரும் ஆரருணா சலமுனிவன்
தாள்பணிந்து பிறங்கி வாழ்வாம்.

திருவாருந் தோலியினுந்
திகழ்பில்ல மங்கலத்தும்

பெருமானை யடிவணங்கிப்
பேரன்பு தலைசிறப்ப

உருவாருந் திருக்கோயிற்
றிருப்பணிசெ யுத்தமனாய்

அருளறங்கள் புரியருணா
சலமுனிவன் அடிபோற்றி.

அன்பர்க்குப் பொன்னீ
வருணா சலசாமி

மன்னும் பதத்தை
வணங்கினல் -பன்னருஞ்சீர்

எல்லா நிதியு
மெழிலாகத் தானுற்று

வல்லாராய் மேதினிவாழ்
வார்.

இல்லறமாம் நல்லறத்தில்
ஏற்ற பணிபுரிந்து

சொல்லுந் துறவறத்தில்
தொல்லுலகார் -வல்லவகை

பாராட்ட நின்றருளும்
பண்பினரை நாள்நாளுஞ்

சீராட்டல் செய்வீர்
தெளிந்து.

திருநிறை வுறும்ஆத் தன்குடித் தோன்றிச்
சிறந்தபே ரறம்பல புரிந்து

மருவிய மனைவாழ் வினிற்சிறந் துயர்ந்த
மக்களைப் பெற்றுமா தேவர்க்கு

அரியகற் கோயில் புதுக்கியும் அமைத்தும்
அருந்தவத் துறவுமேற் கொண்டு

பெருகிய பில்ல மங்கலத் திலிங்க
உருவுகொள் பெரியனைத் துதிப்பாம்.

திருவாருந் தோலியினுந்
திகழ்பில்ல மங்கலத்தும்

உருவாருந் திருக்கோயில்
திருப்பணிசெய் துணவுதரும்

அருளாரும் அறநிலையங்
கண்டுதுற வறம்பூண்ட

தருஞானத் தவஅருணா
சலமுனிவன் தாள்போற்றி.

மாவார் பொழிற்பில்ல மங்கலம் புகுந்தருளித்
தேவாருங் கோயில் திருத்துமரு ணாசலப்பேர்க்
கோவாகி வந்தெம்மைக் குற்றவேல்
கொண்டருள்வான்
பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ!

போதம் நீடுஅருள் புண்ணியம்
அனைத்தும்ஓர் உருவாய்
மாதொர் பாகனூர் மலரடி
மறந்திடா வள்ளல்
கோதுஇ லாதசீர்க் கோவிலூர்
மடத்துஅருள் துறவோன்
நீதன் நல்அரு ணாசலன்
அடிமலர் நினைவாம்

அல்லல் நீங்கி அருளெய்தி
அழியாஇன்ப நெறிசேர்ந்து

நல்ல பில்ல மங்கலத்தில்
நயந்துசமாதி கொண்டருள்வோன்

வெல்லும் அருணா சலசாமி
விளங்கும்ஆனிக் கார்த்திகைநாள்

எல்லா நலனும் வளர்ந்தோங்க
என்றும்வருவீர் இருநிலத்தீர்

அருள்திரு அருணாசல சுவாமிகள்

அர்ச்சனை.

அடியார்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி
அடியார் அடிமை அறிவாய் போற்றி
அடியார்க்கு அமுதெலாம் ஈவாய் போற்றி
அமரர் பதிஆள வைத்தாய் போற்றி
அன்பாகி நின்றார்க்கு அணியாய் போற்றி

ஆகாய வண்ணம் உடையாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
ஆல நிழற் கீழ் அமர்ந்தாய் போற்றி
ஆரும் இகழப் படாதாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி

ஆறேறு சென்னிச் சடையாய் போற்றி
உடலின் வினைகள் அறுப்பாய் போற்றி
உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி
உரியாய் உலகினுக் கெல்லாம் போற்றி
உருகி நினைவார்தம் உள்ளாய் போற்றி

உருவாகி என்னைப் படைத்தாய் போற்றி
ஊழி ஏழான ஒருவா போற்றி
எண்ணும் எழுத்தும்சொல் ஆனாய் போற்றி
எரியாய தெய்வச் சுடரே போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி

என்றும் மீளாஅருள் செய்வாய் போற்றி
ஏழின் இசையே உகப்பாய் போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி

கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி
கடலில் ஒளியாய முத்தே போற்றி
கண்டம் கறுக்கவும் வல்லாய் போற்றி
கண்ணாய் உலகுக்கு நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி

கண்மேலும் கண்ணொன்று உடையாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கறையுடைய கண்டம் உடையாய் போற்றி
கன்னியார் கங்கைத் தலைவா போற்றி
காட்டானை மெய்த்தோல் உரித்தாய் போற்றி

காலத்தாற் காலனையும் காய்ந்தாய் போற்றி
காலை முளைத்த கதிரே போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
காற்றிசைக்கும் திசைக்கெல்லாம் வித்தே போற்றி
கானத்தீ யாடல் உகந்தாய் போற்றி

கொள்ளும் கிழமைஏ ழானாய் போற்றி
சுடரில் திகழ்கின்ற சோதி போற்றி
சூழ்ந்த கடல்நஞ்சம் உண்டாய் போற்றி
செல்லாத செல்வம் உடையாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி

தேவர்க்கும் தேவனாய் நின்றாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
தொண்டர் பரவும் மிடற்றாய் போற்றி
தொழில் நோக்கிஆளுஞ் சுடரே போற்றி
தோன்றிஎன் உள்ளத்து இருந்தாய் போற்றி

நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றி
நான்முகற்கும் மாற்கும் அரியாய் போற்றி
நிறையுடைய நெஞ்சின் இடையாய் போற்றி
நீங்காதுஎன் உள்ளத்து இருந்தாய் போற்றி
நீராவி ஆன நிழலே போற்றி

நீள அகலம் உடையாய் போற்றி
நீறேறு மேனி உடையாய் போற்றி
நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
பண்டை வினைகள் அறுப்பாய் போற்றி
பண்ணார் இசையின்சொற் கேட்டாய் போற்றி

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பண்டே என் சிந்தை புகுந்தாய் போற்றி
படருஞ் சடைமேல் மதியாய் போற்றி
பல்கணக் கூத்தப் பிரானே போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி

பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
பிச்சாடல் பேயோடு உகந்தாய் போற்றி
பிறவி அறுக்கும் பிரானே போற்றி
புண்ணியனே நண்ணல் அரியாய் போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி

பூதப் படையாள் புனிதா போற்றி
பெருகி அலைக்கின்ற ஆறே போற்றி
பேராகி எங்கும் பரந்தாய் போற்றி
பேரா நோய் பேர விடுப்பாய் போற்றி
பொய்சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி

பொருளாக என்னை ஆட்கொண்டாய் போற்றி
போகாதுஎன் உள்ளத்து இருந்தாய் போற்றி
போற்றிசைத்துன் அடிபரவ நின்றாய் போற்றி
மந்திரமும் தந்திரமும் ஆனாய் போற்றி
மருவிஎன் சிந்தை புகுந்தாய் போற்றி

மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
மன்னிஎன் சிந்தை மகிழ்ந்தாய் போற்றி
மாலுக்கும் ஓராழி ஈந்தாய் போற்றி
மாலையெழுந்த மதியே போற்றி
மிக்கார்கள் ஏத்தும் விளக்கே போற்றி

மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
முன்பாகி நின்ற முதலே போற்றி
மூவாத மேனிமுக் கண்ணா போற்றி
மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
மெய்யாக ஆனஞ் சுகந்தாய் போற்றி

மெய்சேரப் பால்வெண்ணீறு ஆடி போற்றி
மேலாடு திங்கள் முடியாய் போற்றி
மேலை வினைகள் அறுப்பாய் போற்றி
மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி
வந்தென்தன் சிந்தை புகுந்தாய் போற்றி

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
விண்ணும் நிலனும்தீ ஆனுய் போற்றி
விண்மேலும் மேலும் நிமிர்ந்தாய் போற்றி
வெய்யாய் தணியாய் அணியாய் போற்றி
வேளாத வேள்வி உடையாய் போற்றி

வேற்ருகி விண்ணுகி நின்ருய் போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்ருய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி

வெளியிடை ஒன்ருய் விளைந்தாய் போற்றி
தென்னுடு உடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
அருணுசல சுவாமிகள் திருவடி போற்றி போற்றி.

சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி.